# பத்திரிக்கைச் செய்தி

இன்று 07.12.2018 அரசு பொது மருத்துவமனைகளில் பணிபுரியும் அலுவலர்கள், பொது மக்களிடம் இலஞ்சம் கேட்டுப் பெறுவதாகவும், பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாகவும கிடைத்த ரகசிய தகவலை அடுத்து மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்கள் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினர் இணைந்து தமிழகத்தில் கீழ்கண்ட அரசு மருத்துவமனைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

| S.NO | CITY/DISTRICT | PLACE |
|---|---|---|
| 1 | CHENNAI | Kasthuri Bai Gandhi Hospital, Triplicane |
| 2 | CHENNAI | Rajiv Gandhi Government Hospital, Chennai |
| 3 | KANCHIPURAM | Government Hospital, Kanchipuram |
| 4 | THIRUVALLUR | Government Hospital, Thiruvallur |
| 5 | DINDIGUL | Government Hospital, Dindigul |
| 6 | THANJAVUR | Government Hospital, Thanjavur |
| 7 | MADURAI | Government Hospital, Madurai |
| 8 | CUDDALORE | Government Hospital, Cuddalore |
| 9 | ERODE | Government Hospital, Gobichettipalayam |
| 10 | SALEM | Government Hospital, Omalur |

மேற்கண்ட திடீர் சோதனையின்போது மருத்துவமனை வளாகத்தில் உள்ள பிரசவ பிரிவு, ஸ்கேன் பிரிவு, மருத்துவ பரிசோதனை கூடம் மற்றும் பிணபரிசோதனைக்கூடம், ஆகிய பிரிவுகளில் சோதனை நடத்தப்பட்டு மருத்துவமனைக்கு வந்த நோயாளிகளிடமும் நோயாளிகளின் உறவினர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டது மேலும் இச்சோதனையில் மருத்துவமனை அலுவலர்கள் செய்யும் வருகை பதிவு முறைகேடு மற்றும் பல்வேறு முறைகேடுகள் குறித்த விவரங்கள், ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு மருத்துவமனை அலுவலர்களிடமிருந்து கணக்கில் வராத ரொக்கப் பணமும் கைப்பற்றப்பட்டது.